முருகப்பெருமான் துணை

**மகான் நாதாந்தச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.03.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. மனம்தளரா கலியுகமக்கள்
மகான் அரங்கன் நெறிக்கு
இணக்கம் கொண்டு வருக
இனி பிறவா நிலை அடைவர் எனக்கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா சோபகிருது சால் திங்கள்
இருபானேழ் திகதி கதிர் வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 27 ம் நாள், 10.03.2024, ஞாயிற்றுக்கிழமை)
இயம்பிடுவேன் நாதாந்தச்சித்தர் யானும்
3. யானுரைக்க உலக நலம் பெற
உயர்ஞானி அரங்கன் காட்டும்
ஞானவழிகளை மக்களெல்லாம்
நம்பிக்கை வைத்து வருதலுற
4. வருகவே படிப்படியாய் மாற்றம்
வரங்களாக அரங்கன் வழி பெற்று
தரும சிந்தை கொண்ட மக்களாக
தானவர்கள் மாற்றம் கண்டு
5. கண்டுமே கலி மாயைக்குள்
கட்டுப்படா வண்ணம் தெளிவு
உண்டாகி வேலவன் வழிபாட்டை
உயர்வாகச் செய்து நாளும்
6. நாள்தோறும் செபதப முறைகளுடன்
ஞானிகளின் திருவடி பற்றிவர
வாழ்வுதரும் தயவு தரும நெறியை
வழக்கமாக்கி நாளும் தொடர
7. தொடரவே நல்லோர் மேலவர்
தொடர்புகள் மிகுதி ஆகியே
இடர் வெல்லும் சக்திமான்களாக
இவ்வுலகை மாற்றும் ஞானவான்களாக

8. ஆகவே நிலைகள் உயர்ந்து
அரங்கமகானின் அவதார
புகழை உலகமெங்கும் பரப்பி
புண்ணிய பலமும் கூட்டி வர

9. வருகவே சமூக மாற்றமாக
வருங்காலம் ஞானசித்தர்காலம்
தருகின்ற சித்திமிக்கவர்களாக
தவராஜனின் வழி காட்டலில் உருவாகி

10. உருவாகி அஞ்ஞானம் கூடிய
ஊழல் தன்மை ஆளுமைகளை
வருங்காலம் அகற்றும் சக்தியாக
வழங்குவேன் சத்யசோதி அமைப்பின்

11. அமைப்பின் அங்கத்தினர்களாக
அனைவரும் இணைந்து மாற்றம்
அமைத்திடுவர் ஞான ஆட்சியுமாக
அருளிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—